II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Atlas published by Union Government

*21 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the attention of the Government has been drawn by the citizens of Kumbakonam, that in 1964 Edition of the Atlas brought out by the Union Education Ministry, the description of Kumbakonam as "the seat of Sri Sankaracharya Math" has been left out; and

(b) if so, whether the Government has made any recommendation to the Union Government in this regard?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes.

திரு. வை. சங்கரன் : எப்போது இம்மாதிரி சிபாரிசு செய்யப் பட்டது, என்ன முறையிலே சிபாரிசு செய்யப்பட்டது, என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சங்கராச்சாரியார் மடத்தினு டைய தலைமை ஸ்தாபனம் என்று 1964 எடிஷன் ஸ்கூல் அட்லாசிலே இருந்தது. இந்த கவர்ன்மெண்டுக்கு அது எடுக்கப்பட்டுவிட்டது என்ற தகவல்பற்றி மனு வந்தது. அதற்குமேல் முன்னே இருந்த படி போடவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப் பட்டது.

பாஞ்சாலங்குறிச்சி அரண்மனை

*22 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட வீரபாண்டிய கட்ட பொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சி அரண்மனை அரசினரால் பாதுகாக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாஞ்சாலங்குறிச்சியில், வீர பாண்டிய கட்டபொம்மனின் அரண்மனை இருந்த இடத்தைப் பாதுகாக்கவும், அங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளவும் மாநிலத் தொல் பொருள் ஆராய்ச்சித்துறை திட்டமிட்டுள்ளது.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, விடுதலைப் போராட் டத்தில் முன்னோடியாக இருந்த வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சியில் இதுவரையிலும் எந்தவிதமான ஞாபகார்த்த சின்னமே இல்லாமல் பாதுகாக்கப்படாமலேயே சுடுகாடாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, எப்போது இதற்கான வேலையை எடுத்துச் செய்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆர்க்கயலாஜிகல் இலாகாவால் இதற்கான ஆராய்ச்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.